**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ஆறுமுகனார் தீட்சையின் போது (09 June 2019) பாரத்வாஜ மகரிஷிகள் உரைக்க, குரு அம்மா பகிர்ந்தது

தடை போட யாருமில்லை
உனக்கு நீ மட்டுமே தடை.

உன் வெளிப் பாதையில் மட்டுமே யாரும் தடை கற்களை வைக்க முடியும்
உள் முகப் பாதையில் யார் தான் தடை போட முடியும்?

வெண்ணை வழுக்கிச் செல்லும் பாதை அது ஒன்று மட்டுமே.
அப்பாதையில் மட்டும் பயணம் செய்
உள்ளிருக்கும் ஈசனை காண ஆடி ஆடி, பாடி பாடி, கூடி கூடி நீ செல்ல
நாடி நரம்புகள் யாவும் நீராய் பெருகி ஓடும்.

மதிதனில் விதியை வைத்துச் சதி செய்தான் ஈசன் என ஏசி நிற்கும் கூட்டம்;
கலைந்து, வெல்லவும் வழி வகுத்தான் ஈசன், என பேசி நிற்க வேண்டும் மக்கள் கூட்டம்.

கற்ற கை மண் அளவை வீசி, கல்லாத உலகம் குதிக்க,
ஊசிமுனை ஓட்டை வழியே கரைத்துக் குடிக்கலாம் நீங்கள் கடலை.

உப்பு என்று உமிழாமல், தப்பென்று ஊதாமல் 'சப்' என்று நீங்கள் மூடிக் காத்திருக்க, 'குப்' என்று வீசுமாம் மலர் மணம்.

கருவிழி உருமாற மறுவிழி நீங்கள் நாட கருத்தொரு புறமான ஈசனின் வீடு காண்பீர்கள்!

Copyright © 2019 Gnanalayam - Pondicherry 